# பாட்டாளி சிந்தனை

Volume 33 No 12 சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

SUCI (Communist)

August 2023 தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ் விலை ரூ 5








**பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவரும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகரும் இச் சகாப்தத்தின் மாபெரும் மார்க்சிய சிந்தனையாளர்களில் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் பிறந்த நூற்றாண்டு நிறைவு (ஆகஸ்டு 5, 2022 – ஆகஸ்டு 5, 2023) நிகழ்ச்சி – பிரிகேட் பேரட் மைதானம், கொல்கத்தா**

# இந்திய சுதந்திரமும் மக்கள் விடுதலையும்

*பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவரும் இக்காலகட்டத்தின் முன்னணி மார்க்சியத் தலைவர்களில் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷின் பிறந்த நூற்றாண்டு விழா கொண்டாடும் இவ் ஆண்டில் வெளிவரும் இதழ்களில் அவரது படைப்புகளிலிருந்து சில கருத்துகளை வாசகர்களுக்கு வழங்குகிறோம். அவ்வகையில் 1967வது ஆண்டு சுதந்திர தினத்தன்று தோழர் சிப்தாஸ் கோஷ், "ஆகஸ்ட் 15 சுதந்திர தினமும் மக்கள் விடுதலையடைவதில் உள்ள பிரச்சினைகளும்" என்ற தலைப்பில் ஓர் உரை நிகழ்த்தினார். அதன் சில பகுதிகளை இங்கு வழங்குகின்றோம்.*

கடந்த 20 ஆண்டுகளாக சுதந்திர தினத்தை “மக்கள் விடுதலை உறுதி ஏற்பு நாள்” என்று நமது கட்சியின் சார்பாக நாம் அனுஷ்டித்து வருகிறோம். ஏன் இவ்வாறு சுதந்திர தினத்தை “மக்கள் விடுதலை உறுதியேற்பு நாள்” என்று அனுஷ்டிக்கிறோம் என்ற கேள்வி எழக்கூடும். நாடு விடுதலை அடையவில்லை என்று நாம் சொல்லவில்லை. அவ்வாறாக நாம் நம்பவும் இல்லை. நாடு அரசியல் ரீதியாக விடுதலை அடைந்து விட்டது என்றே நாம் கருதுகிறோம். பெற்ற சுதந்திரம் எவ்வளவுதான் பலவீனங்களும் குறைபாடுகளும் கொண்டிருந்தாலும், நாட்டின் ஆட்சியாளர்கள் அந்நிய ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் பால் மிருதுவான தன்மையோடு அடிபணிந்து செல்கிறார்கள் என்ற போதும்கூட, அவர்களுடைய கொள்கைகள் ஏகாதிபத்திய சார்பாக இருந்தாலும்கூட, நிலப்பிரபுத்துவத்துடன் அவர்கள் சமரசம் செய்து கொண்டிருந்தாலும்கூட, எல்லாவற்றிற்கும் மேலாக இந்திய முதலாளித்துவ வர்க்கத்தின் நலனை கருத்தில் கொண்டு நிர்வாகத்தை நடத்தி வந்தாலும்கூட நாடு அரசியல் ரீதியாக சுதந்திரம் பெற்று விட்டது என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

சுதந்திர தினத்தை விழாவாகக் கருதாமல், கொண்டாடாமல் அதற்கு மாறாக மக்கள் விடுதலை உறுதியேற்பு நாள் என நாம் ஏன் அனுஷ்டிக்கிறோம்? ஏனெனில் சுதந்திரப் போராட்டத்தின் போது மக்கள் முன்னிருந்த குறிக்கோள் களில் பிரதானமானது எல்லாவகையான சுரண்டலிலிருந்தும் விடுபட வேண்டும் என்பதாகும். ஆனால் தற்போது பெற்றுள்ள சுதந்திரத்தின் மூலம் நம்மீது திணிக்கப்பட்டுள்ள அரசு வடிவமும் பொருளாதார அமைப்பு முறையும் இந்த நோக்கத்தை நிறைவேற்றவில்லை. மாறாக இவை, மக்களின் நம்பிக்கை களும் எதிர்பார்ப்புகளும் லட்சியங்களும் நிறைவேறும் பாதையில் பெரும் தடைகளாக இருக்கின்றன. இந்தத் தடைகளை அகற்றவில்லை என்றால் எல்லா விதமான சுரண்டலிலிருந்து மக்களின் விடுதலை என்பது சாத்தியப்படாது.

### இந்திய சமுதாயம் வர்க்கங்களாக பிளவுபட்டது

இந்திய சமுதாயம் வர்க்கங்களாக பிளவுபட்டது என்று நாம் சொல்லும் போது இதை வெறும் வார்த்தை ஜாலம் என்றும் மார்க்சிஸ்ட்– லெனினிஸ்டு களின் வழக்கமான செல்லக்கருத்து என்றும் பலர் கருதக்கூடும். இந்திய சமுதாயமானது பிளவுபடுத்த முடியாத முழுமையான ஒன்றல்ல என்பதும் அது ஒன்றுபட்ட இந்திய தேசம் அல்ல என்பதும் மாறாக அது வர்க்கங்களாக பிளவு பட்ட சமுதாயம் என்பதும் மார்க்சிஸ்டுகளின் கற்பனை சொல்லாடல் அல்ல.

தொடர்ச்சி 2ம் பக்கம்

# பொது சிவில் சட்டம் குறித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

*(பொது சிவில் சட்டம் குறித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் 12.07.2023 அன்று இந்திய சட்டக் கமிஷன் செயலாளர் அவர்களுக்கு அனுப்பிய மனு)*

மாண்புமிகு ஐயா,

பொது சிவில் சட்டம் (Universal Civil Code UCC) அமலாக்கம் குறித்து தாங்கள் வரவேற்றதற்கிணங்க எங்கள் கருத்துக்களை சமர்ப்பிக்கிறோம்.

மார்க்சிஸ்டுகள் என்ற வகையில், சமுதாயத்தை ஜனநாயகப்படுத்து வதற்கான ஒரு அறிவியல்பூர்வ செயற்போக்கைப் பின்பற்றி நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களின் ஒப்புதலைப்பெற்று உருவாகும் பட்சத்தில், அனைவருக்கும் பொருந்தும்வகையில் ஒரு பொது சிவில் சட்டம் வேண்டுமென, நாங்கள் உண்மையிலேயே விரும்புகிறோம். ஒரு உண்மையான மதச்சார்பற்ற ஜனநாயக நாடு வேண்டுவதும் இதுதானாகும். ஆனால் அப்படி அமுலாக்குவதற்கு முன் சுமுகமான சமூக கலாச்சார சூழல் உருவாக்கபட வேண்டும். இந்தியாவில் தற்போது நிலவும் சூழ்நிலை பொது சிவில் சட்டத்தை அமுலாக்க ஏதுவாக முதிர்ச்சியடைந்துள்ளதா? இல்லை என்பதே உண்மை. சமூக கலாச்சார வேறுபாடுகள் நிறைந்த, பல மத, பல தேசியயின, பல இனங்களைக் கொண்ட இந்தியாவில் திருமணம், விவாகரத்து, சுவீகாரம், வாரிசு ஆகியவற்றிற்கு மதம் மற்றும் இனங்களைச் சார்ந்து வெவ்வேறு சட்டங்கள் இருக்கின்றன. தனிமனித சட்டங்கள் என்பவை பல்வேறு சாதி, மத, இன, பல்வேறு நம்பிக்கைகளைச் சார்ந்த மக்களை ஆளக்கூடியவையாகும். எடுத்துக்காட்டாக இந்து திருமண சட்டம், முஸ்லிம் தனிநபர் சட்டம் போன்றவை மத ஏடுகளைப் பின்பற்றியும் பழக்கவழக்கங் களைப் பின்பற்றியும் இயற்றப்பட்டிருக்கின்றன. பௌத்தர்கள், சீக்கியர்கள், கிறிஸ்துவர்கள், முஸ்லிம்கள், பார்ஸிகள், இந்துக்கள் மற்றும் பல மலைவாழ் மக்கள் திருமணம், விவாகரத்து, சுவீகாரம், வாரிசு, சொத்துக்களை அடைதல் ஆகிய நோக்கங்களுக்காக வெவ்வேறு பிரத்தியேக குடும்ப சட்டங்கள் அல்லது வழக்கங்களைக் கடைபிடிக்கின்றனர். இந்துமதத்தில்கூட நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் திருமணம் விவாகரத்து ஆகிய விஷயங்களில் பல வகுப்பினர் ஒரே நடைமுறையைப் பின்பற்றுவதில்லை. மேலும், மத்திய அரசு சட்டத்தின் சில அம்சங்கள் எடுத்துக்காட்டாக குற்றப்பிரிவு சட்டம் சிஆர்பிசி 1973 வடகிழக்குப் பிராந்தியத்தில் செல்லாது. கோவாவில் முஸ்லிம்கள் போர்சுக்கீசியர் சட்டங்களாலும் சாத்திரங்கள் அடிப்படை யிலான இந்து சட்டங்களாலும் ஆளப்படுகின்றனர். அவர்கள் முஸ்லிம் தனிநபர் (பெர்சனல்) சட்டங்களால் ஆளப்படவில்லை. மேகாலயாவிலும் நாகாலாந்திலும் இதேபோன்ற வேறுபாடுகளைக் காணலாம். ஜம்மு– காஷ்மீரில்கூட இந்துக்களை கட்டுப்படுத்தும் சட்டங்கள் மத்திய சட்டங்களிலிருந்து வேறுபட்டவையாகும். இதற்கெல்லாம் பொருள், இவை சம்பத்தப்பட்ட எல்லா நுணுக்கமான அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் பொது சட்டம் என ஒன்றைப் பற்றிப் பேச முடியாது. எனவே, அதி முக்கியமான இப்பிரச்சினையில் சட்டத்தத்தைக் கொண்டு வருவதற்கு முன்பு, மக்களின் அனைத்து சமூககலாச்சார வேறுபாடு களையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

தொடர்ச்சி 3ம் பக்கம்

## இந்திய சுதந்திரமும் மக்கள் விடுதலையும் . . .

# தேசபக்தி என்ற முகத்திரையை அணிந்து கொண்டு முதலாளித்துவ வர்க்கம் விடுதலைப் போராட்டத்தில் இணைந்தது

*1ம் பக்கத் தொடர்ச்சி*

இந்தியாவின் உழைக்கும் மக்கள், மிகவும் அடித்தட்டில் உள்ள சாதாரண மக்கள் உடலுழைப்பு தொழிலாளர்கள் முதல் அறிவுசார் பணிகள் செய்கின்ற படித்த அறிவுஜீவிகள் வரை அனைவருமே ஏதேனும் ஒரு வர்க்கத்தை சேர்ந்தவர்களாகவே உள்ளனர். இவர்கள் செல்வத்தின் சொந்தக்காரர்களாக இல்லை. உற்பத்தியாகின்ற செல்வத்தின் மீதான உடைமையோ அல்லது செல்வத்தை உருவாக்கும் உழைப்புக் கருவிகள் மீதான உடைமையோ இவர்களுக்கு கிடையாது. இவர்கள் தங்கள் உழைப்புச் சக்தியை விற்பவர்களாக மட்டுமே இருக்கிறார்கள். இந்த உழைப்பு சக்தியானது உற்பத்தியில் பயன்படுத்தப் பட்டு, உற்பத்தி நடத்தப்பட்டு இதன் மூலம் உடமை யாளர்களிடம், அதாவது முதலாளித்துவ வர்க்கத் தினரிடம் மலைபோல் லாபம் குவிகிறது. அதேநேரம் வெகுமக்களுக்கோ ஏதோ கஞ்சி குடிப்பதற்கு போதுமான அளவிற்கு செல்வம் கிடைப்பதே பெரும் பாடாக உள்ளது. உற்பத்தி சாதனங்கள், ஆலைகள் ஆகியவற்றின் உரிமையாளராக உள்ள வர்க்கம் வர்த்தகத்தையும் வாணிபத்தையும் தனது முழு கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. இவ்வாறாக, வர்த்தகத்தையும் வாணிபத்தையும் நடத்துவதற்கும், தொழிற்சாலைகளை இயக்குவதற்கும், அவற்றின் சொத்துடமைக்கும், அதிகபட்ச லாபம் ஈட்டுவதற்கான உற்பத்தி முறையை கட்டுப்படுத்துவதற்குமான உரிமையை முதலாளித்துவ வர்க்கத்திற்கு வழங்குவதற்காகவுமே நாட்டின் சட்டம் ஒழுங்கு அமைப்பு முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. முதலாளித்துவ வர்க்கத்தின் நலனுக்கு அனுகூலமான சமூகநீதி கருத்தாக்கத்தின் அடிப்படையில் சட்டம் ஒழுங்கு கட்டமைப்பு அமைக்கப்பட்டிருக்கிறது.

நாடு பிளவுபட்டுள்ளது. உழைப்பை விற்று பிழைப்பு நடத்துவோர் மற்றும் முதலாளித்துவ வாதிகள் என நகர்ப்புறங்களில் உள்ள மக்கள் இரு கூறாகப் பிளவுபட்டுள்ளனர். கிராமப்புறங்களில் விவசாயக் கூலிகள், பண்ணையாளர்கள் என மக்கள் இரு கூறாகப் பிளவுபட்டுள்ளனர். இந்த உண்மையை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. இந்த பிளவை மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்களாகிய நாம் உண்டாக்கவில்லை. சமுதாயத்தின் தவிர்க்க இயலாத வளர்ச்சி விதிகளைப் பின்பற்றி இந்தப் பிளவு ஏற்பட்டுள்ளது. எந்த கற்பனாவாத தர்க்கத்தை கொண்டும் இந்த உண்மையை பிற்போக்கு முதலாளித்துவவாதிகளாலும் அவர்களிடம் கூலி வாங்குகின்ற அறிவுஜீவிகளாலும் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. வர்க்கப் போராட்டம் என்ற இக்கருத்தியலை உருவாக்கியவர் காரல் மார்க்ஸ் அல்ல என்பதை சரித்திர மாணாக்கர் ஒவ்வொரு வரும் அறிவர். உலகில் மறுமலர்ச்சி இயக்கத்தின் போது முதன்முதலில் இதனை அங்கீகரித்தவர்கள் முதலாளித்துவவாதிகளே ஆவர். வர்க்கப் போராட்டத்தின் பரிணாம வளர்ச்சியை அறிவியல் ரீதியாக பகுப்பாய்வு செய்ததும், இந்த வர்க்கப் போராட்டத்தின் தீர்மானகரமான இறுதிக் கட்டம் "பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரமே" என்று சொன்னதும் மட்டுமே காரல் மார்க்ஸ் ஆகும்.

எனவே வர்க்கங்களாகப் பிளவுபட்டுள்ள சமுதாயத்தில் சுதந்திரம் என்பதன் பொருள் சுரண்டுவோருக்கு ஒன்றாகவும் சுரண்டப்படு வோருக்கு வேறொன்றாகவும் இருக்கிறது. அவ்வாறாகவே தேசநலன் என்பதும் இவ்விரு வர்க்கத்திற்கும் வெவ்வேறான பொருள் தருகிறது. இதை மறுப்போரும் பொத்தாம் பொதுவாக தேச நலன், சுதந்திரம் என்று பேசுவோரும் எனது பார்வையில் ஒன்று ஏதுமறியா முட்டாளாக இருக்கவேண்டும் அல்லது வேண்டுமென்றே மக்களிடமிருந்து உண்மையை மறைப்பவராக இருக்க வேண்டும். எல்லாவற்றையும் தெரிந்து கொண்டே அவர்கள் மக்களை ஏமாற்றுகிறார்கள். தேச நலன் என்று சொல்லும் போது யாருடைய நலனை அவர்கள் பொருள்படுத்துகிறார்கள் என்ற கேள்வியை அவர்களிடம் நாம் கேட்க வேண்டும். நமது நாட்டில், வர்க்கங்களாக பிளவுபட்ட சமுதாயத்தில் ஒருபுறம் முதலாளி வர்க்கமாகவும் மறுபுறம் பாடுபடும் மக்கள், விவசாயிகள் தொழிலாளர்கள் மத்தியதர வர்க்கத்தினர் அறிவுஜீவிகள் என உழைக்கும் வர்க்கமாகவும் பிளவுபட்டு இருக்கையில் தேச நலன் என்பது எந்த வர்க்கத்தின் நலனைக் குறிக்கிறது என்று அவர்களிடம் கேட்க வேண்டும். நாட்டின் நலனுக்காக சட்டம் ஒழுங்கு இருக்க வேண்டுமானால், அப்படிச் சொல்லப்படுகின்ற நாட்டின் நலன் என்பது நாட்டின் பெரும்பான்மையான மக்களை உள்ளடக்கியதாக இல்லையென்றால், தேச நலன் என்பது நாட்டில் உள்ள நிலப்பரப்பையும் நீர்ப்பரப்பையும் குறிப்பதாக ஆகிவிடும். தேசம் என்பது நிலத்தைக் குறிக்கவில்லை மக்களைக் குறிக்கிறது என்றால், உண்மையில் தேச நலன் என்பது முதலாளித்துவ வர்க்கத்தின் நலன் என்ற பொருளாகிவிடும். இந்த முதலாளித்துவ நலனுக்கும் மக்களுக்கும் என்ன சம்பந்தம்? ஆனால் நாடு என்பதன் பொருள் உண்மையான மனித சமுதாயம் என்று பொருள் கொள்ளப்படுமானால் நாட்டின் சட்டம் ஒழுங்கு என்பது மக்கள் நலனுக்கு எதிராக போக முடியாது; சட்டம் ஒழுங்கு என்ற பெயரில் மக்களை ஏய்க்க முடியாது; மக்களை அதிகாரத்திற்கு பணிய வைக்கவோ அவர்களது போராட்ட இயக்கங்களை நசுக்கவோ முடியாது. உடைமை யாளர்களின் நலன்தான் தேசத்தின் நலன் என்று நடைமுறையில் அதன் பொருள் மாறாது. உடைமையாளர்களின் ஆசைகளை பூர்த்தி செய்வதற்காக தேச நலன் என்ற பெயரில் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படமாட்டாது. ஏனெனில் நாடு என்பது உடைமையாளர்கள் என்ற பொருள் கொண்டதல்ல. ஆனால் சட்டத்தின் புனிதத்துவம் என்ற பெயரில் கூச்சலிடுவோரைப் பரிசீலித்தால் அவர்கள் வெட்கமின்றி முதலாளித்துவ வர்க்கத்துக்காக இறைஞ்சுகிறார்கள் என்பதும் இதனை நாட்டின் பெயரால் செய்கிறார்கள் என்பதும் நன்கு புலப்படும்.

### முதலாளித்துவ வர்க்கத்தின் செல்வாக்கிற்கு ஆளான காங்கிரஸ் கட்சி

ஆரம்பத்தில் சுதந்திரப் போராட்டத்தில் நம் நாட்டு மக்களும் முதலாளித்துவ வர்க்கத்தின் ஒரு பிரிவினரும் கலந்து கொண்டனர். தேசியவாத, தேசப்பற்று மிக்க முதலாளித்துவ வர்க்கம் என்று சொல்லப்படுகின்ற டாட்டா பிர்லா குழுமங்கள் போன்றோர் அதாவது முதலாளித்துவ வர்க்கத்தின் ஒரு பிரிவினர் நிதி அளித்து காங்கிரசுக்கு உதவி செய்தனர் என்பதை சரித்திர மாணவர்கள் நன்கறிவர். இது விஷயமாக பஞ்சாப் கேசரி லாலா லஜபதி ராய் அவர்கள் விடுத்த எச்சரிக்கையை இங்கே நான் நினைவுகூற விரும்புகிறேன். காந்திஜி உட்பட தலைவர்களில் ஒரு பிரிவினர் நாட்டின் நலன் கருதி அர்ப்பணிப்பு மிக்க காங்கிரஸ் தொண்டர்களின் செலவுகளை ஈடுகட்டுவதற்காக ஆலை அதிபர்கள் அளிக்கும் நன்கொடை நிதியை ஏற்றுக்கொள்ளலாம் என்று கூறினர். ஏனெனில் இந்த தொண்டர்கள்தான் பிரச்சாரத்தையும் இயக்கத்தையும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸின் வேலைகள் திட்டங்கள் நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும். எனவே நிதி பெறுவதில் தவறில்லை என்று சொன்னபோது லாலா லஜபதிராய் அதை எதிர்த்து ஒரு எச்சரிக்கையை விடுத்தார். கட்சித் தொண்டர் களின் செலவுகளுக்காக காங்கிரசுக்கு நிதி தேவைப்படுகிறது என்பது உண்மைதான். ஆனால் கட்சி செலவுகளையும் தொண்டர்களின் செலவு களையும் மேற்கொள்வதற்கு ஆலை அதிபர்களிடம் இருந்து நிதி பெறப்படுமானால் ஆலை அதிபர்கள் விரித்துள்ள வலையில் சிக்குகின்றோம் என்றே பொருளாகும் என்றார் அவர். மேலும், இந்த வலையில் இருந்து ஒருபோதும் மீள முடியாது என்றார். லாலா லஜபதிராய் விடுத்த இந்த எச்சரிக்கையை அன்று யாரும் செவிமடுக்கவில்லை. இதன் விளைவாக காங்கிரஸ் கட்சி மற்றும் காங்கிரஸ் தலைமையின் ஒட்டுமொத்த செயல்பாடுகளும் முதலாளித்துவ வர்க்கத்தின் நலனோடு முற்றிலுமாக பின்னிப் பிணைந்து விட்டன. பண்டித ஜவஹர்லால் நேரு காந்தியடிகள் ஆகிய இருவருக்குமே இது பொருந்தும். அத் தலைவர்கள்மீது சாதாரண மக்கள் எவ்வளவு தான் உணர்வுபூர்வ மரியாதை கொண்டிருந்தாலும் இந்த உண்மையை மறுக்க முடியாது.

தேசபக்தி என்ற முகத்திரையை அணிந்து கொள்ளும் நோக்கத்துடன் முதலாளித்துவ வர்க்கம் விடுதலைப் போராட்டத்தில் இணைந்தது. இதற்காகத்தான் அவர்கள் நிதி அளித்து காங்கிரசை ஆதரித்தனர். விவசாயிகள் தொழிலாளர்கள் கீழ் நடுத்தர வகுப்பினர் மாணவர்கள் ஆகியோரும்கூட விடுதலைப்போராட்டத்தில் இணைந்தனர். இவ்வாறாக, அந்தக்காலத்திலேயேகூட இந்நாட்டின் சமுதாயம் இவ்விரு வர்க்கங்களாகப் பிளவுப்பட்டி ருந்தது. கிராமப்புறங்களில் ஜமீன்தார்கள் அதாவது நிலச்சுவான்தார்கள் விவசாயிகள் என்றும், நகர்ப் புறங்களில் ஆலை அதிபர்கள் தொழிலாளர்கள் என்றும் விடுதலைப் போராட்ட காலத்திலேயே நாட்டு மக்கள் வர்க்கங்களாக பிளவுபட்டிருந்தனர். பிரிக்கப்பட முடியாத முழுமையான தேசமாக இந்தியா இல்லை. இந்த தேசம் ஒன்றுபட்ட தேசமும் அல்ல. சொல்லப்போனால் சரித்திரத்தில் எந்த தேசமும் மக்களால் ஒன்றுபட்ட தேசம் அல்ல. ஒரு தேசம் ஒன்றுபட்டது என்று சொல்லும்போது அதற்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளன. அந்த ஒன்றுபடலானது ஒன்று முதலாளித்துவ வர்க்கத்தின் நலனுக்காக இருக்கவேண்டும் அல்லது சாதாரண மக்களின் நலன்களை பிரதிபலிப்பதாக தேசத்தின் பரந்துபட்ட சுரண்டப்படும் மக்களின் ஒன்றுபடலாக இருக்க வேண்டும். அரசியல் ரீதியாக இவ்விரண்டு அர்த்தங்களில் ஒன்றுதான் உண்மையாக இருக்க முடியும்.

### இரண்டு வர்க்கங்கள்: இரண்டு லட்சியங்கள்

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இந்தியாவிலிருந்து விரட்டப்பட்டால் ஒழிய அநீதி, முதலாளித்துவ ஒடுக்குமுறை, வணிகர்கள் நடத்தும் ஒடுக்குமுறை, நிலச்சுவான்தார்களின் ஒடுக்குமுறை, அரசு அதிகாரிகளின் ஒடுக்குமுறை ஆகிய அனைத்தையும் முடிவிற்கு கொண்டு வந்து அனைத்து விதமான விடுதலைக்கும் வாய்ப்பு அளிக்கக்கூடிய சமுதாயத்தை படைக்க இயலாது என்று உய்த்துணர்ந்ததால்தான் மக்கள் விடுதலைக்காகப் போரிட்டனர். தனிநபரின் வளர்ச்சிக்கும்

தொடர்ச்சி 6ம் பக்கம்




**மணிப்பூரில் நடந்த வன்முறையைக் கண்டித்து அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் மதுரையில் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் ஏஐடிஎஸ்ஓவின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் தோழர் வால்டேர் உரை**

## பொது சிவில் சட்டம் குறித்து . . .

# ஓடுக்கப்படும் மக்களிடையே நல்லிணக்கத்தை உருவாக்குவதும் பாகுபடுத்தும் விஷயங்களை நீக்குவதும் முதன்மைக் கடமையாகும்

*1ம் பக்கத் தொடர்ச்சி*

இவ்வாறு வேறுபாடுகள் வேற்றுமைகள் மதம் இனம் அடிப்படையிலான வெவ்வேறு பழக்க வழக்கங்கள் சுதந்திரம் பெற்று **75** ஆண்டுகள் ஆனபின்னும் இந்திய சமுதாயத்தில் நிலவக் காரணமென்ன? இதற்கு நிச்சயமான சமூக வரலாற்றுக் காரணங்கள் இருக்கின்றன. நமது விடுதலையியக்கம் மதத்தின் குறிப்பாக இந்து மதத்தின் செல்வாக்கிலிருந்து விடுபட்டிருக்க வில்லை என்பதை வரலாறு சான்றுபகர்கிறது. இந்த, தேசிய விடுதலைப் போராட்டத்தின் இந்துமதத் தன்மை, அப் போராட்டத்திலிருந்து பெரும்பான்மை முஸ்லிம் மக்களை விலக்கி வைத்துவிட்டது. தங்களின் இஸ்லாமியப் பழக்க வழக்கங்களை பேணிப்பாதுகாக்க அவர்கள் தனித்திருக்க எண்ணக் காரணமாகிவிட்டது. இதன் விளைவு, சுதந்திரப் போராட்டம் மதச்சார்பற்ற ஜனநாயக சமுதாயக் கோட்பாட்டிற்கு முரணானதாக அமைந்தது. தேசியவாத சக்திகளுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் பெரும் இடைவெளியை இந்துமதத் தன்மைகொண்ட தேசிய விடுதலைப் போராட்டம் ஏற்படுத்தி விட்டது. மேலும், சுதந்திரப்போராட்ட இயக்கத்தில் இந்துக்களில் மேல்ஜாதியினர் ஆதிக்கம் இருந்தது. எனவே, தாழ்ந்த ஜாதியினர் என்று அழைக்கப் பட்ட, இன்று தலித்துக்கள் என அழைக்கப் படுவோர் பெரும்பகுதியினரும், பல்வேறு பழங்குடியினரும், கிறிஸ்துவம் உட்பட பல்வேறு மதங்களைப் பின்பற்றிய, உரிமைகள் மறுக்கப்பட்ட பெரும்பாலான மக்கள் பிரிவினரும் இந்திய சுதந்திரப்போராட்டத்தின் பிரதான நீரோட்டத் திலிருந்து விலகியிருந்தனர். அடுத்ததாக, பல்வேறு வகுப்பினரிடையே வேற்றுமைகளையும் வித்தியாசங்களையும் கரைத்து அவர்களை ஒரே இந்திய தேசிய அடையாளத்திற்குள் கொண்டு வரும் போக்கான, சமூகத்தை ஜனநாயகப்படுத்தல் சுதந்திரப்போராட்டத்தின் போது நடைபெறாதது போலவே, சுதந்திரம் கிடைத்த பின்பும் நடைபெறவில்லை. இது இவ்வாறு நடந்ததற்குக் காரணம், தேவையான சமூக கலாச்சார சீர்திருத்தங்களை மேற்கொள்ளாமலேயே சுதந்திரப் போராட்டம் அரைகுறையாக நடந்ததுதானாகும். அது முழுமையாக நடந்திருந்தால், நிலப்பிரபுத்துவ பாரம்பரியத்திலிருந்து தோன்றி, பேணி வளர்க்கப் பட்ட பழமையான நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், சடங்குகள், கட்டுத்தளைகள், மத பிற்போகுத்தனங்கள் ஆகியவற்றிலிருந்து இந்திய மக்கள் விடுபட்டிருப்பார்கள்.

இன்று, இவ்வேறுபாடுகள், முரண்கள், காலாவதியான நம்பிக்கைகள், முன்னபிப் பிராயங்கள் எல்லாம் இந்திய மக்கள் மனதில் உறுதியாக நிலைத்துவிட்டதற்குக் காரணம், இவற்றைக் களைவதற்கு சுதந்திரத்திற்குப் பின் இந்தியாவின் ஆட்சியாளர்கள் எந்த செயல் திறனுள்ள சமூக கலாச்சார இயக்க முன்முயற்சி யையும் எடுக்காததே ஆகும். மாறாக, மிகவும் வருத்தத்துடன் நாங்கள் கூறுவது என்னவென்றால், கட்சி வேறுபாடின்றி எல்லா ஆட்சியாளர்களும் மக்கள் மனதில் இவ்வேறுபாடுகளை, பிற்போக்குத் தனத்தை காலாவதியான பழமைவாத சிந்தனை களை மேலும் காலூன்ற ஊக்குவித்துவிட்டனர். ஆக, நாம் அரசியல்ரீதியாக ஒரு தேசமாக உருவாகிவிட்டாலும், மதம், சாதி, மொழி, இனம் என பலவகையில் ஒற்றுமையின்றி இருக்கிறோம். மறு வார்த்தைகளில் கூறினால், சமுதாயத்தை ஜனநாயகப் படுத்த வேண்டிய சமூககலாச்சாரப் புரட்சி நடைபெறாததால் பல்வேறு மத நம்பிக்கைகளையும் வேற்றுமை நிறைந்த பழக்க வழக்கங்களையும் கொண்ட மக்களை ஒரே படித்தான (homogeneous) தேசமாக ஒருங்கிணைக்க வேண்டிய மிக முக்கியமான கடமை நிறை வேறாமலேயே இருந்துவிட்டது. தற்போதைய ஆட்சியாளர்களால் தொடர்ந்து கடைபிடிக்கப் படும் தவறான கொள்கைகளாலும் நடவடிக்கை களாலும் சாதி மத இன வேற்றுமைகள் அகற்றப் படுவதற்குப் பதிலாக மேலும் தீவிரமாகிவிட்டன.

அதுமட்டுமல்ல. மதங்களுக்கு அப்பாற்பட்டு அனைத்துவகையான வேறுபாடுகளையும் தாண்டி உயர்ந்து எல்லா மத மனப்பான்மைகளிலிருந்தும் விடுபடுவதற்கு மாறாக, இந்திய ஆட்சியாளர்கள் மதரீதியான இந்திய தேசியத்தை உருவாக்க இந்துமத மதிப்புகளையும் இந்து புராண காப்பியங் களையும் பரப்பும் பணியை தேர்ந்தெடுத்துக் கொண்டனர். இவ்வாறாக, இந்து மத நடவடிக்கை களுக்கு அப்பாற்பட்டு இயங்குவதில் தவறியதால், இந்திய தேசியம், இந்து தேசியம் என அழைக்கப்படும் தேசியமாக உருவாகிவிட்டது.

மேலும், இந்துக்களெல்லாம் ஒரே தனிமனித சட்டத்தால் ஆளப்படுகின்றனர் என்ற தவறான மாயையை சில பிரிவினர் பரப்பிவருகின்றனர். இது உண்மையல்ல. வரலாறு என்ன சொல்கிற தென்றால், இந்தியா விடுதலையடைந்த பிறகு, **1947**ல் இந்து சட்ட கமிட்டி வரைவு இந்து சட்ட மசோதாவை முன்மொழிந்தது. அதன் நோக்கம், அப்பொழுது இருந்த பலதாரமணம், மகளுக்கு சொத்துரிமை போன்ற இன்னபிறவற்றில் சீர்திருத்தங்களை கொண்டுவருவதாகும். இந்து திருமண சட்டத்தின் படி, திருமணத்தைப் பதிவு செய்யாவிட்டாலும், சில சடங்குகளை, எடுத்துக் காட்டாக அக்னி சாட்சியாக ஏழுமுறை (அதாவது தீயை ஏழுமுறை) சுற்றிவருதல் போன்றவற்றை செய்திருந்தால் அந்தத் திருமணம் செல்லும். இரண்டாம் திருமணத்திற்கு முயற்சிக்கும் பல ஆண்கள் சட்டத்தின் கண்ணிலிருந்து தப்பிக்க, அது தொடர்பான சடங்குகளைத் தவிர்த்து அதேசமயம் வேறு சடங்குகளைச் செய்து சமூக ஒப்புதலைப் பெற்றுவிடுகின்றனர். இதனால்தான் பலதார மணம் இந்து மதத்தில் தடை செய்யப் பட்டிருந்தாலும் இந்துக்களில் சில பிரிவினரிடம் இன்னமும் அது நிலவுகின்றது. அதேபோல, பல இந்துக்கள், இந்து திருமணச் சட்ட விதிகளைக் கடைபிடிக்காமல் தங்கள் குறிப்பிட்ட உட்பிரிவினர் அல்லது குலத்தினர் அல்லது மதப்பிரிவினரிடையே நிலவும் வழக்கத்தைப் பின்பற்றி திருமணம் செய்கின்றனர். எடுத்துக் காட்டாக, நெருங்கிய உறவினரிடையே திருமணம் செய்தல் வட இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ளது ஆனால் சில தென்னிந்தியப் பகுதிகளில் அதைத்தான் புனிதமாக, முறையாக கருதப்படுகிறது. இஸ்லாமியர்களிடமும் இவ்வாறே நடக்கின்றது. இந்துமதத்தின் பரிசுத்தத்தையும், 'பரம்பரை', 'குல வழக்கம்', 'கலாச்சாரம்' என அழைக்கப்படுவன வற்றை பாதுகாக்கிறோம் என்ற பெயரில் பெண்களை அடிமைப்படுத்தி ஆணாதிக்கத்தை நிலைநாட்டுவதும், கண்மூடித்தனமான மத நம்பிக்கையை கேள்விக்கப்பாற்பட்டு ஒழுகுவதும் நியாயப்படுத்தப்படுகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக, இந்துயிசம் என்ற சித்தாந்தத்தின் பெயரில் அவர்கள் பிரச்சாரம் செய்யும் இந்துத்துவம் மீறமுடியாதது, மிக உயர்வானது என்று கருதுகின்றனர். எனவே, இதன் கட்டளைகளை மீறக்கூடாது என்கின்றனர்.

மறுபுறம், புனித இஸ்லாமிய தனிமனித சட்டம் எனக்கூறி அதைப்பற்றி இஸ்லாமிய மதத் தலைவர்கள், அடிப்படைவாதிகள், சமூகப் பிரச்சாரப் பேச்சாளர்கள் விவாதிக்கும்போது அவர்கள் தொனியும் வாதமும் இந்துமதவாதி களைப் போன்றே இருப்பதைப் பார்க்கலாம். இஸ்லாமிய தனிமனித சட்டம்' புனித குரானில் பொறிக்கப்பட்டுள்ளதா, அல்லது 'ஷரியத்' திலிருந்து உருவாக்கப்பட்டதா? ஷரியத்தும் புனித குரானும் ஒன்றா? இல்லை. ஷரியத் என்பது 'கடவுளால் மொழியப்பட்ட'தல்ல. அரேபிய மண்ணைத் தாண்டி இஸ்லாம் பரவியபோது அந்தந்த பகுதிகளில் அப்போது வாழ்ந்த மக்கள், புனித நூலில் என்ன சொல்லியிருக்கின்றது என்று அதில் தேர்ச்சி பெற்றவர்கள் என அவர்கள் கருதிய பெரிய மனிதர்களின் கருத்தைக் கேட்டு அதன் விளக்கத்தையும் நன்மதிப்புகளையும் தார்மீக குணநலன்களையும் பெற்றுக் கொண்டனர். இப் பெரிய மனிதர்களும் இஸ்லாத்தில் சொல்லப் பட்டதை தாங்கள் எப்படிப் புரிந்துகொண்டார்களோ சொந்தமாக உணர்ந்துகொண்டார்களோ அதைக் கொண்டு விதிகளை வகுத்துக் கொடுத்தனர். இப்படித்தான் சியா, சன்னி முஸ்லிம் பிரிவினர் உருவானார்கள்.

இதில் வினோதம் என்னவென்றால், 'ஆண்டவன் கட்டளை' என்று கூறிக்கொண்டு மத கட்டளைகள், வழக்கங்கள், வறட்டுப் பிடிவாதங்களை நியாயப்படுத்துவதில் மத வேறுபாடின்றி அந்தந்த மதக் காவலர்கள் எனக் கூறிக்கொள்வோர் யாவரும் வேறுபாடின்றி ஒத்துப் போகின்றனர்!

சமுதாயத்தை ஜனநாயகப்படுத்த வேண்டும் என்பதற்கு உகந்த வகையில் பொது சிவில் சட்டம் என்ற கோட்பாடு நல்லெண்ணம் கொண்ட மக்கள் மனதில் தோன்றியது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, ஒரு உண்மையான மதச்சார்பற்ற அரசில் பல்வேறு பிரிவு மக்களையும் ஆளும் சிவில் சட்டங்கள் ஒன்றாக ஒரேமாதிரியாக இருக்க வேண்டும். மதம் ஒருவரின் தனிப்பட்ட நம்பிக்கையாக இருக்க வேண்டும். அரசும் நீதித்துறையும் வெவ்வேறு மத நம்பிக்கையைச் சார்ந்த அல்லது மத நம்பிக்கை யில்லாதோரைச் சார்ந்த ஆணையும் பெண்ணையும் வேறுபடுத்திப் பார்க்கக் கூடாது. ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் பரஸ்பரம் நன்மதிப்புகளை அங்கீகரித்து அவரவரது கண்ணியத்தை உயர்த்திப் பிடித்து உருவாக்கிக் கொள்ளும் சமூக உறவைத்தான் திருமணம் என ஜனநாயகக் கோட்பாடு கருதுகிறது. வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்க அதாவது திருமண உறவிற்கு, சுதந்திரமும் சம்மதமும்தான் அடித்தளமாக இருக்க வேண்டும். மதம், சாதி, இனம் என எதுவுமே அத்தகைய உறவிற்கு தடையாக இருக்கக்கூடாது. ஆனால் கலப்புத் திருமணம், தேர்ந்தெடுக்கும் சுதந்திரம், மத கட்டுத்தளைகளுக்கு அப்பாற்பட்டு சமூக வாழ்க்கையை நடத்துதல், வாழ்க்கைத்துணையின் கண்ணியத்தை மதித்துப் பாதுகாத்தல், ஆணுக்கும் பெண்ணுக்கும் பாரபட்சம் இல்லாமை, மதம் இனம் என வேறுபட்ட மனிதர்களிடையே வேற்றுமை பாராட்டாமை ஆகிய யாவற்றையும் அனைத்துத் தரப்பு மக்களின் மனமுவந்த ஒப்புதலுடன் இயற்றப்பட்ட பொது சிவில் சட்டங்களின்றி உத்தரவாதப்படுத்த முடியாது.

ஆக, 'மனமுவந்த ஒப்புதல்' என்று அனைவரும் ஏற்றுக் கொள்ளும் முன்தேவைகளை நிறைவேற்றி விட்ட சூழ்நிலை தற்போது நிலவும் இந்தியாவில் காணப்படுகின்றதா? பொது சிவில் சட்டத்தின் உட்கருத்தை சரியாகப் புரிந்துகொண்டோம் என்றால் 'லவ் ஜிகாத்', கௌரவக் கொலை, கலப்புத் திருமணத்தை அரசாங்க அதிகார உதவியுடன் ஆட்சியாளர்கள் தடை செய்தல், பசு பாதுகாப்புப் படை என்ற பெயரில் மாட்டிறைச்சி உண்போரை அடித்துச் சாகடித்தல் போன்றவையெல்லாம் தங்குதடையின்றி நடந்துகொண்டிருக்குமா? எல்லா குடிமக்களுக்கும் சாதி மத இன பால் வேறுபாடின்றி சமமாக பொருந்தக்கூடிய தனிநபர் சட்டத்தைப் பொருள்படுத்தும் பொது சிவில் சட்டம் இருக்கும் ஒரு தேசத்தில், மதச் சிறுபான்மையினர் மீதான தாக்குதலும் அவர்களுக்கு எதிரான பிரச்சாரமும் வெளிப்படையாக நடைபெறுமா? வேறு வார்த்தையில் சொன்னால், இன்றைய தருணத்தில் திருமணம், விவாகரத்து, சொத்துரிமை, சுவீகரித்தல் ஆகிய விஷயங்களில் எல்லா மதத்தினருக்கும் பொருந்தும் ஒரே சட்டம் இருக்க முடியுமா? அத்தகைய பரிந்துரை மிகச் சரியான ஒன்றாக இருக்கும் என எப்படி நினைக்க முடியும்? நாட்டில் நிலவும் இன்றைய சூழ்நிலையில் அப்படி இருக்க முடியாது என நாங்கள் நம்புகிறோம். மணிப்பூரில் பழங்குடியினத்தவரிடையே ரத்தம் தோய்ந்த இனக் கலவரம் கொழுந்து விட்டு எரிந்துகொண்டிருக்கும்போது, நட்டின் பல

தொடர்ச்சி 4ம் பக்கம்

## பொது சிவில் சட்டம் குறித்து . . .

# பொது சிவில் சட்டத்தைப் பற்றி யோசிப்பதற்கு முன்னர், மக்களிடம் நெகிழ்வுத்தன்மையற்ற மத, இன வேற்றுமை மனப்பான்மையை ஒழிக்கும் அறிவியல்பூர்வமான முறையை யோசிக்க வேண்டும்

3ம் பக்கத் தொடர்ச்சி

பகுதிகளில் மத சாதி இன ஆதிக்க வெறியாட்டங்கள் வன்முறைகள் அவ்வப்போது எடுத்துக் கொண்டிருக்கையில், பொது சிவில் சட்டம் இயற்றும் நேரம் முதிர்ச்சியடைந்துள்ளதா? இரண்டாவதாக, பொது சிவில் சட்டம் எல்லா தனிநபர் சட்டங்களையும் இல்லாமல் செய்துவிடும் என மக்கள் நினைக்கின்றனர். இது, மத அடிப் படைவாதிகள், மதவெறியர்கள், சாதி இன வெறி கும்பல்கள் ஆண்டுகொண்டிருக்கும் இன்றைய இந்தியாவில் நடக்கமுடியுமா? இத்தகைய சமூக நோய்கள், குழப்பங்கள், பிரச்சினைகள் எல்லா வற்றையும் முதலில் அகற்ற சமூகத்தை ஜனநாயகப்படுத்த வேண்டாமா? வலுக்கட்டாயமாக மக்களை ஒருங்குதிரட்டி பொதுமையைத் திணிக்க முடியாது. மாறாக, ஜனநாயக மதிப்புகள், நெறிமுறைகள், தார்மீக மதிப்புகள் அடிப்படையில் தொடர்ந்து மக்களிடையே நயந்து அறிவுறுத்து வதன் மூலம்தான் மக்களை ஒருங்கிணைக்க முடியும். அதற்கு மதச்சார்பின்மையை அரசு மதிக்க வேண்டும், உண்மையான மதச்சார்பின்மை கோட்பாட்டால் அரசு ஆளப்பட வேண்டும்.

ஆக, மக்களிடையே வேற்றுமை தொடர்ந்து வளரும் போது, ஒற்றுமையை வலியுறுத்தும் சட்டத்தை எப்படி திணிக்க முடியும்? அற்பத்தனமான பிரிவினைவாத சக்திகளும் பிற்போக்கு சக்திகளும் நாட்டில் இருப்பதை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் பொது சிவில் சட்டத்தையும் அதனை கட்டாயமாக்குவதையும் நியாயப்படுத்தமுடியாது என்பதை முதலில் உணரவேண்டும். அவற்றை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் பொது சிவில் சட்டத்தை திணித்தால் அது இந்திய குடிமக்களிடம் ஏற்கெனவே நிலவும் பரஸ்பர நல்லிணக்க மின்மை, நம்பிக்கையின்மை, ஒற்றுமையின்மை, பிளவுகள் ஆகியவற்றை மேலும் தீவிரமாக்கிவிடும்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை இயற்றியவர்கள்கூட பொது சிவில் சட்டத்தை இயற்றுவதைப் பற்றி விவாதித்தார்கள். ஆனால் வெறுமனே விவாதத்தின் மூலமும் நாடாளுமன்ற வாக்கெடுப்பின் மூலமும் மட்டுமே அதனைக் கொண்டுவரும் தருணம் இன்னமும் வரவில்லை என அவர்கள் உணர்ந்தனர் என்பதை இங்கு நினைவுகூற வேண்டும். அப்படி செய்தால் பொது சிவில் சட்டம் பயனற்றதாகப் போகும் என அவர்கள் மிகச் சரியாகவே அஞ்சினர். ஒட்டுமொத்த சூழ்நிலையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்கள் அதனை அமைப்புச் சட்டத்தில் 'அரசு கொள்கை வழிகாட்டு கோட்பாடுகள்' என்ற ஷரத்தின் கீழ் போட முடிவெடுத்தனர். அரசியல் அமைப்புச் சட்டத்தை வகுக்கும்போது அதன் வரைவு கமிட்டியின் சேர்மென் டாக்டர் பி ஆர் அம்பேத்கார் அவர்கள் கூறினார்: நாடுமுழுவதும் இருக்கின்ற மத, இன, சாதியக் குழுக்கள் இடையே நல்லிணக்கத்தையும் ஒடுக்கப்படும் பிரிவினரை பாகுபடுத்தும் விஷயங்களை தீர்க்கவும் ஒரு முறையான செயல்முறையைக் கையாளவேண்டியது முதன்மையான கடமையாகும். அதன் பிறகே நாடு முழுமைக்கும் பொது சிவில் சட்டத்தை போடுவது விரும்பத்தக்கது ஆகும் என்றார். அரசியல் அமைப்புச் சட்டத்தை வகுத்தவர்கள் குடியுரிமையை அனைவருக்கும் உத்திரவாதப் படுத்தும் அமைப்புச் சட்ட ஷரத்து 44ஐ அன்றைய தேவையைக் கருதி வகுத்தபோதும், மேற்சொன்ன காரணங்களுக்காக அதனை கட்டாயப்படுத்தாமல் தானாக மனமுவந்து ஏற்றுக்கொள்ளும் விதமாக ஆக்கினர். அப்படியென்றால் ஷரத்து 44ஐ கட்டாயமாக்கும்வரை கடைபிடிக்க வேண்டிய அணுகுமுறை என்ன? இங்கு ஷரத்து 35 என்ன சொல்கிறதென்றால், சட்டங்களை இயற்றும் அதிகாரமும் சில குறிப்பிட்ட அடிப்படை உரிமைகளை நடைமுறையில் கொண்டுவரும் அதிகாரமும் பாராளுமன்றத்திற்கே அன்றி மாநில சட்டசபைகளுக்கு அல்ல என்கிறது.

முக்கியமாக, பொது சிவில் சட்டத்தை கொண்டுவருவதை பரிசீலிக்க 2015இல் அமைக்கப்பட்ட 21வது சட்ட கமிஷன், அச் சட்டம் தற்போது "தேவையுமில்லை விரும்பத்தக்கதுமல்ல" என கூறியதுடன் முதற்கண் ஆண்–பெண் பால் பாகுபாட்டை சமத்துவமின்மையை ஒழிக்க வேண்டும் என பரிந்துரைத்தது. "எனவே இந்தக் கமிஷன் பாரபட்சப்படுத்தும் சட்டங்களைப்பற்றி விவாதித்துள்ளதே தவிர பொது சிவில் சட்டம் வழங்குவதைப் பற்றி அல்ல. அது இத் தருணத்தில் தேவையுமில்லை, விரும்பத்தக்கதுமில்லை. இப்போதெல்லாம் வேற்றுமைகளை அங்கீகரிப்பதை நோக்கி பல நாடுகள் நகர்கின்றன. மேலும், வேற்றுமைகள் இருப்பதுவே பாரபட்சம் இருப்பதாக பொருளல்ல மாறாக அசைக்க முடியாத ஜனநாயகம் நிலவுவதை அது சுட்டிக்காட்டுகின்றது" என அந்த சட்டக் கமிஷன் கூறியது. மேலும், 21வது சட்டக் கமிஷன் தனது பரிந்துரையின் முதல் பக்கத்தில், பொது சிவில் சட்டம் குறித்து எந்த கருத்தொற்றுமையும் எட்டப்படவில்லை எனவும், இப்போதைய தேவை, அடிப்படை உரிமைகளுக்கு முரண்படாவண்ணம் 'வேற்றுமையை பராமரிப்பதுவே' எனவும் தெளிவுபட எழுதியுள்ளது. அந்த முதல் பக்கத்தில் "பொது சிவில் சட்டம் குறித்து கருத்தொற்றுமை எழாததால், முன்னேறிச் செல்வதற்கான சரியான வழி, தனிநபர் சட்டங்கள் குறித்த வேற்றுமையை பராமரிப்பதும் அதே சமயம் தனிநபர் சட்டங்கள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் உத்திர வாதப்படுத்தப் பட்டுள்ள அடிப்படை உரிமை களுடன் முரண்படாமல் இருப்பதை உறுதி செய்வதும் ஆகும்" என தெளிவாக கூறிவிட்டது. 21வது சட்டக் கமிஷனின் கருத்து சரி என்று நாங்களும் கருதுகிறோம். ஆனால் இந்தக் கமிஷனின் கருத்தின் மீது ஏன் ஒரு விவாதமும் நடைபெறவில்லை? இதன் அறிக்கை மூன்று வருடங்களாகிவிட்டன என்ற சாக்குச் சொல்லி இதனை முற்றிலுமாக ஓரங்கட்டி, புதிய சட்டக் கமிஷனை அமைக்க வேண்டிய அவசிய அவசரம் என்ன? 21வது கமிஷனின் அறிக்கை தவறு என நிரூபிக்க அரசாங்கத்தை தடுத்தது எது? அந்த கமிஷனை ஒதுக்கிவிட்டு 22வது சட்டக் கமிஷனை அமைத்து மீண்டும் பொது சிவில் சட்டம் குறித்து பொதுமக்களிடம் ஜூன் 14 2023க்குள் கருத்து கோருவதன் அவசியமென்ன?

வேற்றுமைகள், மதம் தொடர்பான பிரச்சினை களுக்கு சட்டத்தின் மூலம் தீர்வைத் தேடும் சிலர் இருக்கின்றனர். மத, இன அடையாளங்களை பேணும் கோணத்தில் பிரச்சினைகளைப் பார்க்கக் கூடாது என்பதால் இதனை சட்டப் போராட்டக் களத்தில் மட்டுமே கையாளக்கூடிய பிரச்சினை எனக் கருதுவது சரியல்ல. சட்டம் என்ற வடிவில்தான் என்றாலும் வெளியிலிருந்து ஒன்றைத் திணித்தால் அது, மதத்திற்கான உரிமையை மறுப்பதாகக் காட்டப்பட அடிப்படை வாதிகளுக்கு வாய்ப்பைக் கொடுக்கும். மக்களை மதத்தின் அடிப்படையில் தூண்டிவிடும். எனவே, மாற்றத்திற்கான கோரிக்கை, பாதிக்கப்பட்டுள்ள மக்களிடமிருந்து விழிப்புணர்வுடன் உந்துதலாக எழ வேண்டும். சட்டம் என்பதல்லாமல் தார்மீக நியாயமாக எந்த விஷயமும் நிலவ வேண்டும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எல்லா சட்டங்களும் மனிதனால்தான் இயற்றப்படுகின்றன. சமூக முன்னேற்றத்திற்கான மனிதனின் போராட்டத்தில் அவ்வப்போதைய சமூகத் தேவைகளுக்காக சில சட்டங்கள் வந்தன. ஆனால் காலப்போக்கில், மாறும் காலங்களுக்கு ஏற்ப அவற்றில் சில சட்டங்கள் மாற்றப்படுகின்றன, சில அகற்றப்படுகின்றன. வேறுவார்த்தையில் சொல்வதென்றால், புதிய தார்மீக நியாயங்கள் புதிய சட்டமாக்கப்படுகின்றன. எனவே, ஏன் சட்டங்களை எக்காலத்திற்கும் புனிதமானவையாக, மாற்ற முடியாதவையாகக் கருத வேண்டும்?

ஆக, பொது சிவில் சட்டத்தை அறிமுகப் படுத்துவதைப் பற்றி யோசிப்பதற்கு முன்னர், மக்களிடம் வேறுபாடுகளை, கண்மூடித்தனமான நம்பிக்கைகளை, நெகிழ்வுத்தன்மையற்ற இருக்கமான மத, இன கட்டுப்பாடுகளுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் விருப்ப மனப்பான்மையை படிப்படியாக ஒழிக்கும் அறிவியல்பூர்வமான முறையைக் கையாள வேண்டும் என்பது மேலே சொன்ன விஷயங்களிலிருந்து தெளிவாகிறது. நிலவும் வேறுபாடுகளை முடிவுக்குக் கொண்டு வந்து ஒவ்வொரு பிரிவினரும் தனித்து பிரத்தியேகமாக நிற்பதிலிருந்து உடைத்து வெளிவர மிகச் சரியான அணுகுமுறையை வளர்த்தெடுப்பதற்கு ஏதுவாக முன்கூட்டிய விவாதம், நயந்து எடுத்துரைத்தல், பகுத்தறிவு கொண்டு அனைவரின் மனதையும் தொடல் ஆகியவற்றின்மூலம் நாட்டின் எல்லா தரப்பு மக்களின் மனமுவந்த ஒப்புதலைப் பெறவேண்டும். இந்த மிகவும் கடினமான செயலை தவிர்த்து விட்டு, பொது சிவில் சட்டத்தை புகுத்துவதற்கான சுமுக சூழலை என்றைக்கும் உருவாக்க முடியாது. இஸ்லாமியர்கள், கிறிஸ்துவர்கள் மட்டுமல்ல, சமணர்கள், பார்ஸிக்கள், சீக்கியர்கள் மற்றும் மலைவாழ் மக்கள் ஆகியோரும் பொது சிவில் சட்டத்தை இத் தருணத்தில் கடுமையாக எதிர்த்துள்ளனர். அமுலாக்கத்தை இலகுவாகவும் மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையிலும் அவசியமான நிபந்தனைகளை நிறைவேற்றிய பிறகே, தனிநபர் குடிமக்களுக்கிடையே திருமணம், விவாகரத்து, சுவீகாரம், வாரிசு போன்ற தனிநபர் வழக்கங்கள் நடைமுறைகள் மீது சாதி, மத, இன, பால் அடிப்படையில் அவர்களை பாரபட்சப் படுத்தாத, அதே சமயம் சமூக கலாச்சார அரசியல் அம்சங்களில் அனைவருக்கும் சம உரிமையை உத்தரவாதப்படுத்தும் பொது சிவில் சட்டம் புகுத்த நேரம் வந்துவிட்டது எனக் கருத வேண்டும். மக்கள் ஒற்றுமை, சாதி மத இன நல்லிணக்கம், மத சகிப்புத் தன்மை பெருகுதல், பிராந்தியமொழி பிரிவினைவாதம் ஒழிக்கப்படல் ஆகியவை, நிறைவேற்றப்படவேண்டிய அவசியமான முன்நிபந்தனைகளாகும். சமச்சீர் பொதுமை என்பது நிர்ப்பந்தத்தின் மூலம் மக்களை ஒருங்கிணைப்பது என்று பொருளல்ல. மாறாக சரித்திரரீதியாக போடப்பட்டுள்ள மேற்சொன்ன பாதையில் உற்சாகமாக விருப்பத்துடன் கடந்து சென்று அவ்வொற்றுமையை அடைய வேண்டும்.

பல்வேறு தரப்பு மக்களிடையே ஒற்றுமையை சமத்துவத்தை ஒருமையை நல்லிணக்கத்தைக் கொண்டுவரும் உண்மையான நோக்கமின்றி, 'இந்து ராஜ்ஜியத்தை உருவாக்குகிறோம்', 'கிறிஸ்துவர்களையும் இஸ்லாமியர்களையும் இந்து மயமாக்குகிறோம்' என்ற தங்களின் மோசமான நோக்கத்திற்காக 'ஒரே தேசம், ஒரே மொழி, ஒரே சட்டம்' என்று முழங்கிக்கொண்டு முஸ்லிம் எதிர்ப்பு பிரச்சாரத்தை தீவிரப்படுத்த இந்து மதவெறி சக்திகள் முன்வைக்கும் நிகழ்ச்சி நிரலுக்கு சட்ட வடிவம் கொடுக்க பொது சிவில் சட்டத்தை கொண்டுவந்துவிடக்கூடாது என்பதை நாங்கள் இறுதியாக எங்கள் கருத்தாகச் சமர்ப்பிக்கிறோம். நாட்டில் நிலவும் சூழ்நிலையின் யதார்த்தத்தையும் பொறுத்தமான எல்லா அம்சங்களையும் மக்களிடம் நிலவும் அச்ச உணர்வுகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு காலத்தால் நிரூபிக்கப்பட்ட தர்க்கம் மற்றும் உண்மைகளின் அடிப்படையில் முன்வைக்கப்படும் வாதங்களை பொறுமையாக பரிசீலித்து, தனக்கு வெளியே உள்ள வேறு எந்த சக்தியின் செல்வாக்கிலிருந்தும் விடுபட்டு சரியான முடிவை எடுக்க வேண்டுமென 22வது சட்டக் கமிஷனின் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறோம் ■

**பிரவாஸ் கோஷ்**
பொதுச் செயலாளர்
சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

# தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டு நிகழ்ச்சிகள்

*பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவரும் ஆசானும் வழிகாட்டியும் இக்காலகட்டத்தின் தலை சிறந்த மார்க்சிய சிந்தனையாளர்களில் ஒருவரும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபக பொதுச்செயலாளர் தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டு நிகழ்ச்சிகளை (ஆகஸ்ட் 5, 2022 –ஆகஸ்ட் 5, 2023) தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் நடத்திட கட்சியின் மாநிலக் கமிட்டி முன்னதாக முடிவு எடுத்தது. அதன்படி, சென்னை, விழுப்புரம்–கடலூர், சேலம், புதுக்கோட்டை, தேனி–திண்டுக்கல், மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.*

*ஆண்டு முழுவதும் கட்சித் தொண்டர்கள் பொதுமக்களிடையே பல்வேறு பிரச்சாரங்களை மேற்கொண்டனர். பரந்த அளவில் சுவர் எழுத்துப் பிரச்சாரங்கள், போஸ்டர்கள், துண்டுப் பிரசுர வினியோகம், மேற்கோள் கண்காட்சிகள், தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன. பொது மக்களும் ஆர்வத்துடன் பங்கேற்றனர். நிதி ஆதரவும் தந்தனர். தோழர் சிப்தாஸ் கோஷின் இலக்கியங்களை ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர்.*

**சென்னை** *எம்ஆர்நகர் மற்றும் குமரன் நகரில் மேற்கோள் கண்காட்சியும் இலக்கிய விற்பனையும் நடைபெற்றன. கொருக்குப்பேட்டை, வியாசர்பாடி, கொளத்தூர், புளியந்தோப்பு ஆகிய பகுதிகளில் தெருமுனைக் கூட்டங்களும் மேற்கோள் கண்காட்சிகளும் நடைபெற்றன.*

**சேலம்** *மாவட்டத்தில் மல்லூர், பனைமரத்து பட்டியைச் சுற்றியுள்ள கிராமங்கள், தாதகாப்பட்டி கேட் ஆகிய இடங்களில் துண்டுப் பிரசுர விநியோகம், போஸ்டர்கள் ஒட்டுதல் உள்ளிட்ட பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. தாதகாப்பட்டியில் மேற்கோள் கண்காட்சியும் தெருமுனைக் கூட்டமும் நடைபெற்றன.*

**மதுரை** *மாவட்டத்தில் கோரிப்பாளையம், செல்லூர் பகுதிகளில் தெருமுனைக் கூட்டங்களும் கண்காட்சிகளும் நடைபெற்றன. முன்னதாக, சுவர் எழுத்து பிரச்சாரங்கள் மதுரை நகரின் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப் பட்டன. கல்லூரி மற்றும் நீதிமன்ற வளாகங்களில் கல்லூரிப் பேராசிரியர்கள், எழுத்தாளர்கள் மற்றும் வழக்கறிஞர்களைச் சந்தித்து பல்வேறு சமூகப் பிரச்சனைகள் குறித்து தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் படைப்புக்கள் விற்பனை செய்யப்பட்டன. சமூகப் பொருளாதார நெருக்கடி மிகுந்த இன்றைய சூழ்நிலையில் அவரது படைப்புக்களுக்கு வழக்கறிஞர்கள், பேராசிரியர்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பு கிடைத்ததுடன் அவர்கள் நிதி உதவியும் நல்கினர்.*

**இராமநாதபுரம்** *மாவட்டத்தில் முதுகுளத்தூர், கமுதி ஆகிய ஊர்களில் உள்ள இடதுசாரி ஆதரவாளர்களைச் சந்தித்து கட்சியின் இலக்கியங்கள் விற்பனை செய்யப்பட்டன. மேலும்* **விருதுநகர்** *மாவட்டம் திருத்தங்கல் மற்றும் ரெட்டியபட்டியில் பொதுக் கூட்டமும் பொன்மொழிக் கண்காட்சியும் நடைபெற்றன.*

**விழுப்புரம்** *கீழ்ப் பெரும்பாக்கம், வண்டிமேடு சந்திப்பு, சென்னை சாலை ஆகிய இரு இடங்களில் வாகனப் பிரச்சாரத்துடன் பொன்மொழிக் கண்காட்சியும் தெருமுனைக் கூட்டமும் நடைபெற்றன.*

**நெய்வேலி** *மெயின் பஜார், 5வது பிளாக் பகுதியில் இரண்டு தினங்கள் வாகனப் பிரச்சாரத்துடன் மேற்கோள் கண்காட்சி, பரப்புரை, இலக்கிய விற்பனை நடைபெற்றன.*

**தேனி மாவட்டத்தின்** *முக்கிய நகரங்களான தேனி நகரம், லட்சுமிபுரம், ஆண்டிப்பட்டி, க.விலக்கு, சின்னமனூர், போடிநாயக்கனூர், உத்தமபாளையம், கம்பம் ஆகிய இடங்களில் வாகனப்பிரச்சாரத்துடன் மேற்கோள் கண்காட்சி, இலக்கிய விற்பனை நடைபெற்றன* ■




**சென்னையில் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றான்டு தின மாநிலப் பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் ஆ ரெங்கசாமி உரை**



**பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் ஒரு பகுதியினர்**



**தேனி மாவட்ட வாகனப் பிரச்சாரம்**




**தெருமுனைக் கூட்டம் – மதுரை**




**பொதுக்கூட்டம் – சேலம்**




**விருதுநகர் மாவட்டம் ரெட்டியாப்பட்டியில் நடைபெற்ற பொதுக்கூட்டம்**




**மேற்கோள் கண்காட்சி மற்றும் வாகனப் பிரச்சாரம் – நெய்வேலி**



**விருதுநகர் மாவட்டம் திருத்தங்கல் நகரில் மேற்கோள் கண்காட்சியுடன் பொதுக்கூட்டம்**



**தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டு நிறைவு மேற்கோள் கண்காட்சி – சென்னை**




**மேற்கோள் கண்காட்சி மற்றும் வாகனப் பிரச்சாரம் – விழுப்புரம்**




**வாகனப் பிரச்சாரம், மேற்கோள் கண்காட்சி தெருமுனைக் கூட்டம் – புதுச்சேரி**

## இந்திய சுதந்திரமும் மக்கள் விடுதலையும் . . .

# உற்பத்தி சமூகத் தன்மை பெற்றுவிட்டது, மனித உழைப்பும் சமூகமயமாகி விட்டது, ஆனால் உற்பத்தியின் உடைமை மட்டும் தனியாரிடம் உள்ளது, இதுவே அனைத்து அநீதிகளுக்கும் அநியாயங்களுக்கும் காரணமாகும்

2ம் பக்கத் தொடர்ச்சி

மேம்பாட்டிற்கும் வாய்ப்புகள் வழங்கி அனைத்து படிநிலையில் உள்ள குழந்தைகளின் கல்விக்கும் வாய்ப்பளித்து, பொது சுகாதாரத்தைப் பேணுவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப் படக்கூடிய சமுதாயத்தை உருவாக்குவதற்கான விடுதலைக்காகத்தான் அவர்கள் போரிட்டனர். ஏனெனில் இந் நடவடிக்கைகள் எடுப்பதற்கு வழிவகுக்கும், ஒட்டுமொத்த திட்டமிடலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பொருளாதார வளர்ச்சியின் மூலமாக மட்டும்தான் மக்களுக்கும் சமுதாயத்திற்கும் நலன்களையும் சௌகரியங்களையும் கொண்டுவரமுடியும் என்றும் இது மட்டுமே மக்கள் நலன் கருதி ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கான கதவுகளைத் திறந்துவிடும் என்றும் அப்படிப்பட்ட சமுதாயத்தை நிறுவுவதற்கு மேலே சொன்ன அனைத்து வித ஒடுக்குமுறைகளும் இல்லாத சமுதாயத்தை படைக்க வேண்டும் என்றும் சாதாரண மக்கள் விடுதலைப் போரில் ஈடுபட்டனர்.

ஆனால் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட இந்திய முதலாளித்துவ வர்க்கத்திற்கு முற்றிலும் எதிர்மாறான நோக்கம் இருந்தது. **43** கோடி மக்களைக் கொண்ட நாட்டின் **(1967**இல்**)** சுரண்டப் படக்கூடிய சந்தையை மொத்தமாக உறிஞ்சி அந்நிய முதலாளிகளான பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் அனைத்து செல்வங்களையும் எடுத்துச் சென்று விடுகின்றனர். ஆனால் இந்திய தேசிய முதலாளிகள் பிரிட்டிஷ் முதலாளிகளுடைய இளைய பங்குதாரர்களாக மட்டுமே இருக்கின்றனர். அந்நியர் ஆட்சி இருப்பதால்தான் இந்த பரந்துபட்ட சுரண்டக் கூடிய சந்தையை முழுவதுமாக கொள்ளை அடிக்கிற வாய்ப்பு தங்களுக்கு கிட்டாமல் போகிறது என்று இந்திய முதலளிகள் கருதினர். தங்கள் சொந்த மூலதனத்தின் வளர்ச்சியும் இதனால் தடைபடுகிறது என்று அவர்கள் கருதினர். எனவே அவர்களுடைய நோக்கமானது பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடமிருந்து அரசு அமைப்பைக் கைப்பற்றி அரசு அதிகாரத்தை முற்றிலுமாக தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதே ஆகும். இந்திய முதலாளித்துவவாதிகள் மக்கள் விரும்பும் புரட்சிக்காக நிற்கவில்லை. சமுதாயத்தில் அடிப்படையான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை லட்சியமாகக் கொண்டிருக்கவில்லை. பிரிட்டிஷ்காரர்கள் ஆட்சியிலிருந்து அகன்றால் அவர்கள் நிர்மாணித்த நிர்வாகத்தை இந்திய முதலாளிகள் தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ளலாம் — இந்த நோக்கத்தோடுதான் முதலாளித்துவ வர்க்கம் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டது. நாடு விடுதலை பெற்றுவிட்டால் அரசு அதிகாரத்தை தாங்கள் கைப்பற்றிக் கொள்ளலாம் என்று எண்ணினர். அவ்வாறு கைப்பற்றினால் இந்த **43** கோடி மக்கள் உள்ள உள்நாட்டுச் சந்தையின் மீது தங்களுடைய மேலாதிக்கத்தை நிறுவ முடியும் என்று கருதினர். அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் இந்தியாவில் முதலாளித்துவத்தை மேலும் கெட்டிப்படுத்தி முன்னேறிச் செல்லலாம் என்றும் முதலாளித்துவ ஆட்சி மற்றும் சுரண்டலின் சுமைகள் அனைத்தையும் மக்கள் தலையில் சுமத்திவிட்டு சுதந்திரம் பெற்றுவிட்டோம் நாட்டின் மேம்பாட்டிற்காக திட்டமிடுகிறோம் என்று சொல்லி தங்கள் திட்டங்களை மக்கள் திட்டங்கள் என்று தம்பட்டம் அடித்துக் கொள்ளலாம். இந்த லட்சியத்தை அடைவதற்காகத்தான் தேசிய விடுதலை இயக்கத்திற்கு (காங்கிரசிற்கு) இந்திய முதலாளிகள் நிதி அளித்து உதவினார்.

### முதலாளித்துவ சமுதாயத்தின் அடிப்படை அநீதி

...முதலாளித்துவம் வளர்வதற்கு முன்பு சுமார் **500** ஆண்டுகளுக்கு முன்பு மனித உழைப்பின் தன்மை என்னவாக இருந்தது? தங்களுடைய சொந்த நுகர்வுக்காக மக்கள் உழைத்தனர். அத்துடன் சற்று கூடுதலாகவும் உற்பத்தி செய்தனர். தங்கள்



**சிப்தாஸ் கோஷ்**

சொந்த நுகர்வுக்காக பிற பொருள்களை வாங்குவதற்கு பண்டமாற்று செய்து கொள்வதற்காகவே அவ்வாறு கூடுதலாக உற்பத்தி செய்தனர். இதன் பொருள் என்னவெனில், சாதாரண மக்களின் உழைப்புச் சக்திக்கான உடைமையும் உரிமையும் அவர்களிடமே இருந்தது. இதற்கு நேர்மாறாக இன்றைய உழைக்கும் மக்கள் அவர்கள் உடலுழைப்பு தொழிலாளர்களாயினும் சரி அறிவுசார் தொழிலாளர்களாயினும் சரி, விவசாயிகளாயினும் சரி, பேராசிரியர்கள் போன்ற தொழில்முறை பணியாளர்களாயினும் சரி இவர்களில் யாருமே தங்களுடைய சொந்த உழைப்பு சக்திக்கு உரிமையாளர்கள் அல்ல. இவர்களுடைய உழைப்புச் சக்தியானது முதலாளித்துவ சந்தையில் விற்கப்படும் ஒரு சரக்காக பண்டமாற்றம் செய்யப்பட்டுவிட்டது. இதன் உரிமையானது உழைப்பை வாங்கும் முதலாளித்துவவாதிகளின் கைகளில் உள்ளது. அவர்கள் இதனை வாங்கவோ விற்கவோ செய்யலாம். எத்தகைய விதிகளின் கீழ் தொழிலாளர்கள் தங்கள் உழைப்பு சக்தியை விற்பது என்று நிபந்தனைகளையும் முதலாளித்துவ வாதிகள் பிறப்பிக்கலாம். ஆகவே சாதாரண மக்களின் உழைப்புச் சக்தி எப்படிப்பட்ட தன்மையை தற்போது அடைந்துள்ளது? அவர்கள் தங்களுடைய சொந்த நுகர்வுக்காக தற்போது உழைப்பது இல்லை. அவர்களுடைய உழைப்பானது சமூக உற்பத்திக்காக மாற்றப்பட்டிருக்கிறது. இந்த அர்த்தத்தில் உழைக்கும் மக்களுடைய உழைப்பானது இயல்பில் சமூகத் தன்மையை அடைந்து விட்டது. முதலாளித்துவ வாதிகளும் தங்களுடைய சொந்த நுகர்வுக்காகவா உற்பத்தியை நடத்துகிறார்கள்? அல்ல. சந்தையில் விற்று பொருளீட்டவே அவர்கள் உற்பத்தியை நடத்துகிறார்கள். வேறு வார்த்தை களில் சொல்வதானால் அதிகபட்ச லாபம் பெறுவதற்காக. ஆனால் அவர்கள் வெளியில் சொல்லிக் கொள்வது மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அதாவது சமூக தேவைகளை பூர்த்தி செய்வதற்காக உற்பத்தி நடத்தப்படுகிறது என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

ஆக இன்று நம் நாட்டில் உற்பத்தியானது சமூகத் தன்மையை பெற்று விட்டது அது விவசாயத்துறை ஆயினும் சரி தொழில்துறை ஆயினும் சரி. உற்பத்தியானது சமூகத் தன்மையை அடைந்து விட்டது. இதன் காரணமாக அந்த உற்பத்தியில் ஈடுபடுகின்றோரின் உழைப்பு சக்தியும் சமூகமயமாக ஆகிவிட்டது. ஆனால் உற்பத்தியின் உடைமை என்பது தனிநபர் கைகளில் உள்ளது. உற்பத்தியின் இந்த சிறப்பம்சமாகிய உழைப்புச் சக்தியின் சமூகத் தன்மை உடைமையின் தனிநபர் வசமுள்ள தன்மை இதுவே, சமுதாயத்தேவையுடன் அடிப்படையான ஒத்திசைவு இல்லாமைக்கும் எல்லாவிதமான அநியாயங்களுக்கும் அநீதிகளுக்கும் அடிப்படை காரணமாகும். தனிநபர் உற்பத்தியை அபகரிக்கின்ற உரிமையை பாதுகாப்பதற்காகவே சட்டம் ஒழுங்கு இயந்திரம் செயல்படுகிறது என்பதை நீங்கள் பார்க்க முடியும். அதாவது சமூக உழைப்பு சக்தியால் உற்பத்தியான செல்வத்தை அபகரிப்பதற்கு தனிநபருக்கு உரிமை வழங்கப்படுவதை, சொத்து வைத்துக் கொள்வதற்கான உரிமையை, தனிநபர் உடைமைக்கான உரிமையை பாதுகாப்பதற்காகவே சட்டம் ஒழுங்கு இயந்திரம் செயல்படுகிறது. எனவே சட்டம் ஒழுங்கு என்ற கட்டமைப்பு சமூக அநீதி என்ற பலகையின் மீது தான் நிற்கிறது. அதாவது சட்டம் ஒழுங்கு கட்டமைவு நீதி பற்றிய எந்த கருத்தாக்கத்தின் அடிப்படையில் இருக்கிறதோ அந்தக் கருத்தாக்கமானது அடிப்படையில் சமூக அநீதியும் பாகுபாடும்மே ஆகும். உழைப்பின் தன்மை சமூகமயம். தொழிலாளி சமுதாயத்திற்காக உற்பத்தி செய்கிறான். அவன் சமுதாயத்திற்காக பணியாற்று கிறான். ஆனால் உடைமையும் தனி நபர் வசம். தனிநபர் உடைமையின் இந்த உரிமையை பாதுகாப்பதே நாட்டின் சட்டம் ஒழுங்கின் அடிப்படைக் கோட்பாடாகும். நீதியின் மேலா இது கட்டமைக்கப்பட்டிருக்கிறது? அல்லது சமூக அநீதியின் மீது கட்டமைக்கப்பட்டிருக்கிறதா?

### அறம், நீதிபரிபாலனம், சட்டம் ஒழுங்கு கோட்பாடு ஆகியவற்றின் மூலமும் பரிணாமமும்

...எவையெல்லாம் சட்டப்படியாக சரியானவையோ அவையெல்லாம் நியாயமானதாக நீதியாக பகுத்தறிவின்பாற்பட்டதாக மனிதத் தன்மையுடையதாக இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை என்பதை சட்டம் மற்றும் நீதி பரிபாலன மாணவர்கள் நன்கு அறிவர். அதேபோல் நடப்பிலுள்ள சட்டத்திற்கு புறம்பாக இருக்கின்றன என்பதாலேயே ஒரு விஷயம் அநியாயமானது, பகுத்தறிவற்றது மனிதத் தன்மை அற்றது என்று அர்த்தமாகிவிடாது.

நீதி பரிபாலனத்தின் கோட்பாடு பற்றி அறிந்தவர் அனைவருக்கும், அது பரிணாம வளர்ச்சி அடைந்து வந்த வரலாறு பற்றி அறிவர். அதன் கோட்பாடுகள் எவ்வாறு எப்போதும் மாறிக் கொண்டும் வளர்ந்து கொண்டும் மேம்பட்டு கொண்டும் இருக்கின்றன என்பதை அறிந்தவர்களும் ஒரு விஷயத்தை நன்கு அறிவர். அதாவது நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்து ஜனநாயகத்திற்காக நடத்திய போராட்டத்தின் போக்கில் சரித்திரத்தில் எவ்வாறு தற்போது நிலவும் சட்டம் ஒழுங்கு பற்றிய கருத்தாக்கம் படிப்படியாக உயர்ந்தது என்பதை அவர்கள் அறிவர். அதுமட்டு மின்றி, தற்போது நிலவும் நீதி மற்றும் சட்டம் ஒழுங்கு பற்றிய கோட்பாடுகளுக்கு ஏற்றார்போல் மனிதனும் மனித சமுதாயமும் பரிணாம வளர்ச்சி அடையவில்லை என்பதையும் மாறாக மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் உறுதுணை புரிவதற்காகத்தான் நீதி மற்றும் சட்டம் ஒழுங்கு பற்றிய கோட்பாடுகள் வளர்ச்சியுற்றன என்பதையும் அறிவியல் மாணவர்கள் நன்கறிவர்.

தனக்கே உரித்தான பிரத்யேக சட்டம் ஒழுங்கு கட்டமைப்பை கொண்டு உருவான குறிப்பிட்டதொரு சமூக அமைப்பு முறையானது அதன் அடிப்படையாக கொண்டுள்ள அறமும் விழுமியங்களும் அக்குறிப்பிட்ட சமுதாயத்தின் தேவைகளை பூர்த்தி செய்கின்றன. ஆனால் இந்த குறிப்பிட்ட அறங்களும் விழுமியங்களும் சமூக நீதியும் சட்டம் ஒழுங்கு கட்டமைப்பும் காலப்போக்கில் பழைய சமுதாயம் மாறி புதிய சமுதாயம் உருவாகும் போது ஒரு சிலரின் கைகளில் பெரும் சலுகைகளாக மாறி பிற்போக்கு தன்மையுடையவை ஆகிவிடுகின்றன. இதன் விளைவாக விழுமியங்கள் பற்றிய உணர்வு அறம், சமூக நீதி பற்றிய கோட்பாடு ஆகியவை புதிதாக புதியசமுதாயத்தில் தோன்றுகின்றன. சமூக முன்னேற்றத்திற்கும் புதிய தேவைகளின் அடிப்படையில் இவ்வாறு உருவாவது அவசியமாகிறது. பழைய விழுமியங்கள் அறங்கள் பற்றிய உணர்வுகள் மற்றும் சமூக நீதி பற்றிய கோட்பாடு ஆகியவற்றுக்கும், சமூக முன்னேற்றத்தின் நலனுக்காக வளருகின்ற புதிய விழுமியங்கள் அறம் பற்றிய உணர்வுகள் மற்றும் சமூகநீதி பற்றிய கோட்பாடு ஆகியவற்றுக்கும் இடையே உருவாகின்ற மோதல்கள் உண்மையில் யதார்த்தத்தில்

தொடர்ச்சி 7ம் பக்கம்

# விவசாயப் பாசன நீர் கோரி வத்தலக்குண்டு விவசாயிகளின் தொடர் போராட்டம்

வைகை அணை, சோத்துப்பாறை அணை மற்றும் மஞ்சளாறு அணை ஆகியவற்றின் உபரி நீரை 15 கிராமங்களை உள்ளடக்கிய சுமார் 40,000 ஏக்கர் நிலப்பரப்புக்கு பயன்படும் வகையில் தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்ட, வத்தலக்குண்டு மற்றும் பெரியகுளம் ஒன்றிய பகுதிகளுக்கு கொண்டுவர கால்வாய் அமைத்துத்தர வேண்டுமென்று இப்பகுதி விவசாயிகள் அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கமான ஏஐகேகேஎம்எஸ் (AIKKMS) தலைமையில் நீண்ட நாட்களாகப் போராடி வருகின்றனர்.

இதன் பின்னணியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வைகை அணை, சோத்துப்பாறை அணை மற்றும் மஞ்சளாறு அணை ஆகியவற்றின் உபரி நீரை கால்வாய்கள் அமைத்து கொண்டுவருவது சாத்தியமில்லை என செயற்பொறியாளர், நீர் வளத்துறை, திட்டம் மற்றும் வடிவமைப்புக் கோட்டம் மதுரை அவர்கள் வாயிலாக ஏஐகேகேஎம்எஸ் அமைப்புக்குத் தெரிவிக்கப்பட்டது. மேலும் 2023–24 நீர் வளத்துறையின் சட்டமன்ற அறிவிப்புகளில், அமராவதி மற்றும் காவேரி ஆறுகள் இணையும் இடத்திலிருந்து நீரேற்றம் மூலம் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள குளங்களுக்கு நீர் வழங்கும் திட்டத்திற்கு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள அறிவிக்கப்பட்டிருப்பதாகவும், இத்திட்டத்தை முன்னோடியாக எடுத்துக்கொண்டு விரைவில் ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு நீரேற்றத் திட்டத்தின் சாதக பாதகங்களை ஆய்வு செய்து அரசிற்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் பின்னர் அரசின் அறிவுரையின்படி வைகை அணை, சோத்துப்பாறை அணை மற்றும் மஞ்சளாறு அணை ஆகியவற்றின் உபரி நீரை நீரேற்றம் மூலம் எழுவனம்பட்டி மற்றும் விராலிப்பட்டி ஊராட்சியில் உள்ள குளங்களுக்கு வழங்கும் திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இப்பின்னணியில், மேற்கண்ட கோரிக்கையை மேலும் வலியுறுத்திட அடுத்த கட்டப் போராட்டமாக 12.07.2023 அன்று வத்தலக்குண்டு நகர்ப் பகுதியில் ஒரு பெருந்திரள் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தத் திட்டமிடப்பட்டது. அதன்படி, ஏஐகேகேஎம்எஸ் வத்தலக்குண்டு வட்டாரக் கமிட்டி சார்பில் சுமார் 15 கிராமங்களில் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு, வத்தலக்குண்டு நகரில் பிரதான இடத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏஐகேகேஎம்எஸ் பதாகைகளுடன் கிட்டத்தட்ட 250 விவசாயிகள் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஏஐகேகேஎம்எஸ் அகில இந்தியக் கவுன்சில் உறுப்பினர் தோழர் கோவிந்தராசு, ஏஐகேகேஎம்எஸ் மாநிலத் தலைவர் தோழர் சந்திரபோஸ், ஏஐகேகேஎம்எஸ் மாநிலச் செயலாளர் தோழர் சுருளியாண்டவர் மற்றும் மாநிலக் கமிட்டி உறுப்பினர்கள் தோழர் சதிஷ், தோழர் சுரேஷ் உள்ளிட்ட அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பலர் உரையாற்றினர். அந்த ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கையை வலியுறுத்தி தமிழக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரையும் மாநில முதல்வரையும் சந்தித்து கோரிக்கை மனு அளிக்கவிருப்பதாகவும் ஊடகங்களுக்கு பேட்டி தரப்பட்டது ■




**வத்தலக்குண்டு மற்றும் பெரியகுளம் ஒன்றியப் பகுதிகளுக்கு வைகை அணை, சோத்துப்பாறை, மஞ்சளாறு அணைகளின் உபரி நீரை கிளை வாய்க்கால் அமைத்து திருப்பிவிடக் கோரி வத்தலக்குண்டு காளியம்மன் கோயில் எதிரில் ஏஐகேகேஎம்எஸ் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்**

# இந்திய சுதந்திரமும் மக்கள் விடுதலையும் . . .

6ம் பக்கத் தொடர்ச்சி

பழைய சமூக அமைப்பு முறை, அதன் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றுக்கும் புதிய சமூக அமைப்பு அதன் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றுக்கும் இடையே நடக்கின்ற போராட்டமே ஆகும். இத்தகைய மோதல்கள் மற்றும் போராட்டங்களின் செயற்போக்கின் வாயிலாக இவற்றின் அடிப்படையில் அமைந்த மனித விழுமியங்கள் அறங்கள் சட்டம் ஒழுங்கு கோட்பாடுகள் ஆகியன தொடர்ந்து பல்வேறு சமுதாயங்களில் பல்வேறு காலங்களில் மாறி கொண்டு வந்தன. இவ்வாறு மாற்றமடைந்து இன்று இருக்கின்ற நிலைமை வந்தது. இவ்வாறாக ஆண்டான் அடிமை சமுதாயம் ஒரு காலத்தில் சிதைவுற்று நிலப்பிரபுத் துவம் தோன்றியது. அதேபோல் முதலாளித்துவப் புரட்சி முதலாளித்துவ ஜனநாயகம் போன்ற கருத்துக்கள் நிலப்பிரபுத்துவத்தின் கருவறைக்குள் தோன்றிய போது மனிதனுடைய புரட்சிகர உணர்வு வளர்ந்து நிலப்பிரபுத்துவ உணர்வின் அடிப்படையிலான சட்டம் ஒழுங்கு அறங்கள் நீதி மத ரீதியான பாகுபாடுகள் ஆகியவற்றுக்கு எதிரான போராட்டங்கள் எழுந்தன. அன்றைக்கு இருந்த சட்டம் ஒழுங்குக்கு எதிராக இந்த புரட்சிகர உணர்வு இருந்தபோதிலும் அது தார்மீக ரீதியாகவும் நியாயப்படியும் நீதியின் படியும் சரியானது ஆகும். இந்தப் போராட்டத்திற்கு அன்று தலைமை தாங்கியவர் யார்? நாம் இன்று வாழுகின்ற இந்த முதலாளித்துவ சமூக அமைப்பை நிறுவுவதற்காக போராடிய முதலாளித்துவ தலைவர்கள் தான் இப்போராட்டத்திற்கு தலைமை தாங்கினர். சட்டம் ஒழுங்கை உயர்த்திப் பிடிக்க வேண்டுமென்று இன்று யார் கூக்குரலிடுகிறார்களோ அவர்கள் தான் அன்று நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராக குரல் எழுப்பியபோது இவ்வாறாக கூறினர்: "பகுத்தறிவிற்கு உட்படாத எதையும் துண்டு துண்டாக கிழித்து எறியுங்கள். சட்டத்திற்கு எதிரான செயலாக இருந்தாலும் பரவாயில்லை. அன்று அவர்கள் ஏன் அவ்வாறு கூறினர்? ஏனெனில் நிலப்பிரபுத்துவ உணர்வுகள் அடிப்படையிலான விழுமியங்கள், அறங்கள், சமூகநீதி ஆகியன பெரும்பான்மை சமுதாயத்தின் நலன்களுக்கு எதிராக இருந்ததாலும் அதன் காரணமாக சமூக முன்னேற்றத்திற்கு எதிராக இருந்ததாலும் அவ்வாறு அவர்கள் கோஷம் எழுப்பி போரிட்டனர்.

### தற்போதைய சமுதாயத்தில் சட்டம் ஒழுங்கு முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்கு சேவை செய்கிறது

தற்போதைய சமுதாயத்தில் உள்ள சட்டங்களும் சட்டம் ஒழுங்கு கட்டமைப்பும் முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சிக்கு ஏற்றாற்போல் இருக்கின்றன. அவை எந்த வடிவத்தில் இருந்தாலும் முதலாளித்துவ வர்க்க ஆட்சியை காப்பதற்காக சமூக சொத்தின் மீது தனிநபர் உடைமையை பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட சட்டங்களும் கட்டமைப்புகளும் ஆகும். இன்று சமூக முன்னேற்றத்தின் பாதைக்கு முதலாளித்துவ பொருளாதார அமைப்பு முறையும் முதலாளித்துவ அரசு கட்டமைப்பும் தடைகளாக இருக்கின்றன. ஆகவே இன்றைய சமுதாயத்தில் சட்டம் ஒழுங்கு கட்டமைப்பை தாங்கி நிற்கின்ற விழுமியங்கள், அறங்கள், சமூக நீதி ஆகியவை தனது வர்க்க ஆட்சியைத் தொடருவதற்கும் வர்க்க சுரண்டலைத் தொடர்ந்து நடத்துதுவதற்கும் முதலாளித்துவ வர்க்கத்தின் கைகளில் வெறும் சலுகைகளாக குன்றிவிட்டன. எனவே எந்த ஒரு முற்போக்கு வாதியாலும் சமூக நீதியின் மேல் கட்டமைக்கப் பட்டுள்ள சமுதாயத்தின் சட்டம் ஒழுங்குக்கு கீழ்ப்படிந்து நடக்க முடியாது. ஜனநாயகத்தை கடைபிடிப்பதாகவும் முன்னேற்றத்தை உயர்த்திப் பிடிப்பதாகவும் சொல்லிக்கொண்டு ஒருவர் அதே சமயம் அறம் விழுமியங்கள் சமூக நீதி ஆகியன பற்றிய புதிய உணர்வுகளின் அடிப்படையில் வளர்த்தெடுக்கப்படுகின்ற ஜனநாயக வெகுஜன இயக்கங்களை ஆதரிப்பதற்கு பயந்து கொண்டும் இருப்பதென்பது தொடர முடியாது.

...ஆகவே, முதலாளித்துவ சமூக அமைப்பு முறை அப்படியே இருக்கும் என்றும் அதை நாம் சீர்திருத்த முயலுவோம் என்றும் இந்த அமைப்பு முறை குள்ளேயே திட்டங்களை வகுத்து மக்களுக்கு நல்வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முயலுவோம் என்றும் நினைப்பது தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டு அடுத்தவரையும் ஏமாற்றும் செயலாகும். மக்கள் நலனுக்காக சில நிவாரணங்களைப் பெற்றுத் தருவதற்காக சீர்திருத்தங்கள் செய்வதற்கான போராட்டங்கள் நடத்தலாம். ஆனால் இவற்றிற்கு தெளிவான நோக்கம் இருக்க வேண்டும். சீர்திருத்தங்கள் மற்றும் சில நிவாரண நடவடிக்கைகளுக்கான இந்த இயக்கங்கள் என்பன இந்தியாவில் முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சிக்கு வழிவகுப்பதாக அமையவேண்டுமே அன்றி அதற்கு தடங்கல் ஏற்படுத்துவதாகவும் முதலாளித்துவ சமூக அமைப்பு முறையை பற்றியும் அதன் பாராளுமன்றத்தை பற்றியும் மாயையை ஏற்படுத்துவதாக இந்த இயக்கம் அமைந்துவிடக் கூடாது. சீர்திருத்த இயக்கங்கள் இவ்வாறாக நடத்தப்பட்டால் மட்டுமே புரட்சியாளர்கள் ஆதரவளிப்பர். நமது கட்சியும் இத்தகைய இயக்கங்களை மட்டுமே ஆதரிக்கும். புரட்சிகர போராட்டத்தை வலுப்படுத்தாத சீர்திருத்தங்கள் எவையும் சுய ஏமாற்று ஆகும். இவை சர்க்கரை தடவிய வார்த்தைகளைக் கொண்டு மக்களுடைய போர்க்குணத்தை சாந்தப்படுத்தி வைப்பதற்காக முதலாளித்துவவாதிகள் கையாளுகின்ற ஒரு கருவியாகும். 15 ஆகஸ்ட் சுதந்திர தினத்தன்று இந்த விஷயங்களை நாம் மீண்டும் வலியுறுத்தி மக்களுக்கு இவற்றை மீண்டும் மீண்டும் நினைவூட்டுகிறோம் ■

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

பாட்டாளி சிந்தனை

Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# ஆகஸ்டு 5, பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டு நிறைவு நிகழ்ச்சி இந்திய வரலாற்றில் ஓர் முக்கிய மைல்கல்

*ஆகஸ்ட் **5, 2023** கொல்கத்தா பிரிகேட் மைதானம் பல ஆண்டுகள் கழித்து மக்கள் திரட்சியால் நிறைந்தது. உலகப் பாட்டளிவர்க்க மார்க்சியத் தலைவர்களான மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாசேதுங் ஆகியோர் வரிசையில் வைத்து எமது கட்சியால் முன்னிறுத்திப் போற்றப்படும் இந்தியாவின் மாபெரும் மார்க்சிய ஆசான் தோழர் சிப்தாஸ் கோஷின் பிறந்த நூற்றாண்டை மிகப் பெரிய பிரிகேட் மைதானத்தில் நடத்த முடிவு செய்ததை எள்ளி நகையாடிய அரசியல் விமரிசகர்கள், மைதானம் மட்டுமின்றி அதைச் சுற்றிய சாலைகளிலும் மக்கள் கூட்டம் அலைமோதியதைக் கண்டு வாயடைத்தனர். **24** மாநிலங்களிலிருந்து கட்சி ஆதரவாளர்கள் பல்லாயிரக்கணக்கில் வந்ததுடன் கொல்கத்தா நகர மக்களும் மேற்கு வங்கம் ஒரிஸ்ஸா உபி பீகார் அஸ்ஸாம் ஆகிய அருகமை மாநில மக்களுமாக சுமார் இரண்டு இலட்சத்திற்கும் மேலாக ஊர்வலமாக மைதானத்தில் குவிந்தனர். இரயில்கள் ரத்து, மழை போன்ற காரணங்களால் மேலும் பலர் வரயியலாமல் தவித்தனர்.*

*சுமார் **50** அடி உயரமும் **300** அடி நீளமும் கொண்ட மேடை, செங்கொடியையும் தோழர் சிப்தாஸ் கோஷ் உருவப்படத்தையும் தாங்கி காந்தமென மக்களை ஈர்த்துக்கொண்டிருக்க, நகரெங்கும் செங்கொடிகளும் அறிவிப்புப் பதாகைகளும் எட்டுத்திசைகளிலுமிருந்து மக்களை வரவேற்றுக் கொண்டிருந்தது.*

*தமிழகம் மற்றும் புதுச்சேரியிலிருந்து நூற்றுக் கணக்கில் கட்சித் தொண்டர்களும் ஆதரவாளர் களும் தங்குமிடத்திலிருந்து ஊர்வலமாகச் சென்று நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.*

*கூட்டத்தை பொலிட்பிரோ உறுபினர் தோழர் ராதாகிருஷ்ணா தலைமை தாங்க, இளம் கம்யூனிஸ்டுகளின் சீரணிப்படை அணிவகுத்து தோழர் சிப்தாஸ் கோஷ் உருவப்படத்திற்கு வீராஞ்சலி செலுத்தியது. பிறகு ஒவ்வொரு மாநிலத்தையும் சேர்ந்த இசைக்குழுக்கள் பாடல்களை இசைத்தன. தமிழக இசைக்குழுவும் 'வர்க்கபேதமற்ற பூமி இங்கு காணாவே, புரட்சிப்பாதை ஒன்றினை வகுத்துத்தந்தவர், நமக்கெல்லாம் விழிப்பு தந்த தோழர் வாழ்கவே' என்ற பாடலை சேர்ந்திசைத்தனர். இறுதியாக, கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் நீண்டதொரு சிறப்புரையை ஆற்றினார்.*

*கொல்கத்தாவை வியப்பில் ஆழ்த்திய இக்கூட்டத்தைப் பாராட்டியும் வியந்தும் பல்வேறு ஊடகங்கள் கருத்து தெரிவித்தனர். கட்சி தனது முதல் காங்கிரஸ் நடத்திய பொழுது இருந்ததைவிட மிகப் பெரிய அளவில் **34** ஆண்டுகள் கழித்து இக்கூட்டத்தை நடத்தியதாக அவை எழுதின.*

*நிகழ்ச்சியைப் பற்றிய விரிவான செய்திகளும் தோழரின் சிறப்புரையின் சாராம்சமும் அடுத்த இதழில் வரும்* ■



**தோழர் சிப்தாஸ் கோஷ் உருவப்படத்துக்கு எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் மலர் வளையம் வைத்து அஞ்சலி**



**கொல்கத்தா பிரிகேட் பேரட் மைதானத்தில் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலுமிருந்து வந்திருந்த மக்கள் திரளின் ஒரு பகுதி**

# புதுச்சேரியில் பாட்டளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டு நிறைவு விழா

ஜூலை **26, 2023** சாரம் ஜீவா திடலில் தோழர் யு முத்து, மாநில அமைப்புக் கமிட்டி உறுப்பினர் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மத்தியக் கமிட்டி உறுப்பினரும், கேரளா மாநிலச் செயலாளருமான தோழர் ஜெய்சன் ஜோசப் சிறப்புரையாற்றினார். அவரது ஆங்கில உரையை புதுச்சேரி ஒருங்கிணைப்பபாளர் தோழர் அனவரதன் மொழிபெயர்த்தார். மூத்த வழக்கறிஞர் மாநில ஏஐயுடியுசி தலைவர் பு சங்கரன், ஏஐயுடியுசி மாநிலச் செயலாளர் எஸ் சிவகுமார் ஆகியோர் உரையாற்றினர். இக்கூட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர் ■




**தோழர் ஜெய்சன் ஜோசப், மத்தியக் கமிட்டி உறுப்பினர் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) சிறப்புரை**




**கூட்டத்தில் கலந்துகொண்டோர்**

*சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம்: பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம்: ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094,* ***ஆசிரியர்: ஆ ரெங்கசாமி***

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor: A Rengasamy**
Tel : 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**